R 3461 (page 344)

# தேவதூதரைப் போலிருப்பார்கள்

# LIKE UNTO THE ANGELS.

### அங்கு நாம் ஒருவரையொருவர் அறிந்துகொள்வோமா?

எதிர்கால ஜீவியத்தில் ஒருவரையொருவர் நாம் அறிந்தவர்களாய் இருப்போமா? பரலோக வகுப்பாருக்கும், பூமிக்குரிய வகுப்பாருக்கும் இடையில் தொடர்பு பரிமாற்றம் இருக்குமா? என்ற கேள்விகள் அடிக்கடி நம்மிடம் கேட்கப்படுகின்றன.

தற்காலத்திலுள்ள பழக்கம் அடுத்த ஜீவகாலத்திலும் நீடிக்கும், புத்துயிர் பெரும் மற்றும் அதிகரிக்கும் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். ஆவிக்குரிய ஜீவத்தளத்தை அடைபவர்களாகிய மணவாட்டி எனும் ஜெயங்கொள்ளும் வகுப்பார் மற்றும் கன்னிகைகளாக, அவளைப் பின்தொடரும் தோழிகள், வேதவாக்கியங்களில் "திரள் கூட்டத்தார்" என்று அழைக்கப்படும் வகுப்பார் அனைவரும் ஆவிக்குரிய தளத்தில் காணப்படுவதினால், அவர்கள் ஒருவரையொருவர் பார்க்க முடிபவர்களாகவும், ஒருவரையொருவர் அறிந்தவர்களாகவும் இருப்பார்கள்; காரணம் அவர்கள் அனைவரும் ஆவிக்குரிய ஜீவிகள் ஆவார்கள். உண்மைதான் மணவாட்டி வகுப்பார், அவளது கர்த்தராகிய இயேசுவோடும், பிதாவோடும் திவ்விய தளத்தில் காணப்படுவார்கள்; மேலும் திரள்கூட்டத்தார் தேவதூதர்களைப்போன்று ஆவியின் ஜீவிகளுக்குரிய கீழ்த்தளத்தில் காணப்படுவார்கள். அனைத்து ஆவிக்குரிய ஜீவிகளினாலும்
R3462 : page 347
ஒருவரையொருவர் பார்க்க முடியும், அறிய முடியும் மற்றும் உரையாட முடியும்; திவ்விய தளத்தில் இருப்பவர்கள் வரிசையிலும், ஸ்தானத்திலும் மாத்திரம் மேம்பட்டவர்களாய் இராமல், அவர்கள் தன்னில்தான் ஜீவன் உடையவர்களாக, அழியாமையை உடையவர்களாகக் காணப்படுவார்கள்; ஆனால் மற்றவர்களோ தொடர்ச்சியாக வழங்கப்படும் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வார்கள்.

மனுக்குலத்தின் உலகத்தார் இப்பொழுதுபோல, அப்பொழுதும் ஒருவரையொருவர் அறிந்துகொள்வார்கள் - சிலரை முன்னமே அறிந்திருந்ததன் காரணமாயும், சிலரை அறிமுகம் பண்ணிவைக்கப்பட்டதன் காரணமாயும் அறிந்துகொள்வார்கள். பரிபூரண மனிதர்களாக வந்து காணப்படும் முற்பிதாக்களில் யார் ஒருவரையும், உலகத்திலுள்ள யார் ஒருவரும் அறியமாட்டார்கள்; ஆகையால் முற்பிதாக்களையும், அவர்களது அதிகாரத்தையும் பிரகடனப்படுத்தும் தெய்வீகமான அற்புதங்களின் சாட்சியம் மூலமாக அல்லது வேறு ஏதேனும் வழிவகை மூலமாக, முற்பிதாக்கள் பற்றி ஏதோ ஒருவகையில் அறிமுகம் செய்யப்பட வேண்டும். உலகத்தார் ஒருவருக்கொருவர் எப்படி அறிமுகம் செய்துகொள்வார்கள் என்பதை எளிதில் கற்பனைபண்ணிப் பார்க்கலாம். அதாவது இன்றைய காலங்களில் மனிதர்கள் மத்தியில் அறிமுகம் செய்யப்படுதல் போன்றேயாகும். இதுபோன்ற அறிமுகங்கள் சந்தேகத்திற்கிடமின்றி திரைக்கப்பால் காணப்படும் மகிமையடைந்த பரிசுத்தவான்கள் மத்தியிலும் அவசியப்படும்; ஏனெனில் அவர்களில் பெரும்பாலானோர் கர்த்தரையும், அப்போஸ்தலர்களையும், ஒருவர் இன்னொருவரையும் பார்த்ததே இல்லை.

### ஆவிக்குரிய ஜீவிகள் மற்றும் மனுஷர்களுக்கிடையே தொடர்பு பரிமாற்றங்கள்

இப்பொழுது கடைசி அம்சத்திற்கு வருகின்றோம். ஆயிர வருஷ யுகம் முழுவதிலும் மாத்திரமல்லாமல், அதற்குப் பின்னரும் பரலோக மற்றும் பூலோக ஜீவிகளுக்கிடையே தொடர்பு பரிமாற்றங்கள் சந்தேகத்திற்கிடமின்றி காணப்படும் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். எங்களுடைய புரிந்துகொள்ளுதலின்படி ஆயிர வருஷ காலங்களின்போது, அதாவது தேவனுடைய பிரியமான

குமாரன் இராஜ்யத்தைக் கையளிப்பதற்கு முன்புவரை, பிதாவிற்கும், பரலோகத் தூதர்களுக்கும் மனுக்குலத்தோடு எந்தச் சம்பந்தமும் இருக்காது. ஆனால் இராஜ்ய வகுப்பாராகிய சபை மற்றும் அதன் தலையாகிய இயேசுவுக்கும், இவர்களது மேற்பார்வை மற்றும் சீர்ப்பொருத்தும் செல்வாக்குகளின்கீழ்க் காணப்படும் மனுக்குலத்தின் உலகத்திற்கும் இடையில் தொடர்பு பரிமாற்றம் காணப்படும். பூர்வ காலங்களைத் திரும்பிப்பார்க்கையில், ஆவிக்குரிய ஜீவன்கள் தொடர்புகொள்ளும் நோக்கத்திற்காக மனித உருவங்களை எடுப்பதன் மூலம், தேவன் ஆபிரகாமோடும், அவரது பல்வேறு மாம்சீக சந்ததியினரோடும் தொடர்பு கொண்டிருந்திருக்கின்றார். எனினும் இப்படி உருவம் எடுத்து தோன்றுவதை எதிர்காலத்தில் நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது, ஏனெனில் தெய்வீக ஏற்பாட்டில் நாம் வேறொரு ஏற்பாட்டினைப் பார்க்கின்றோம்.

இந்த ஒரு நோக்கத்திற்காகவே முற்பிதாக்கள் என்பவர்கள் ஒரு வகுப்பாராக முன்கூட்டியே ஆயத்தம் பண்ணப்பட்டுள்ளார்கள் என்று நாம் காண்கின்றோம்; மனித பரிபூரணம் அருளப்படப்போகிற இவர்கள், ஆவிக்குரிய இராஜ்யத்திற்கும், மனுக்குலத்தின் உலகத்திற்கும் இடையில் மத்தியஸ்தம் பண்ணும் நடுவர்களாகச் செயல்படுவார்கள். எழுதியிருக்கிறபடி: "சீயோனிலிருந்து திருச்சட்டம் வெளிப்படும்; எருசலேமிலிருந்து ஆண்டவரின் வாக்கு புறப்படும்" (மீகா 4:2; திருவிவிலியம்). ஆவிக்குரிய இராஜ்யத்திலிருந்து, அதன் பிரதிநிதிகளாகிய பூமிக்குரிய பிரபுக்களுக்குப் போதனைகள் கடந்துவரும்; மேலும் அந்தப் பிரபுக்கள் மூலம் பூமியின் குடிகள் அனைவருக்கும் காரியங்கள் தெரிவிக்கப்படும்; இவர்கள் ஒவ்வொரு சட்டங்களை நிறுவுவதற்கும், நன்மை செய்கிறவர்களுக்குப் பலன் அளிப்பதற்கும், கீழ்ப்படிய தவறுகிறவர்கள் யாவரையும் தண்டிக்கிறதற்கும், இராஜ்யத்தினுடைய நாமத்தில் முழு வல்லமையும், அதிகாரமும் உடையவர்களாய்க் காணப்படுவார்கள்.

ஆயிர வருஷ யுகத்தினுடைய முடிவில், மனப்பூர்வமாய்ப் பொல்லாங்கு செய்பவர்கள், இரண்டாம் மரணத்தில் சங்கரிக்கப்படுவார்கள்; மனுக்குலத்தின் உலகத்தார் தேவதூதர்களைப்போன்றிருப்பார்கள்; நித்திய ஜீவனை அடைந்தவர்களாகவும், பாலின வேற்றுமை இல்லாமலும் காணப்படுவார்கள். ஆயிர வருஷ காலத்தின்போது முற்பிதாக்கள் காணப்பட்டதுபோலவே, மனுக்குலம் பரிபூரண மனிதர்களாகக் காணப்படுவார்கள். கிறிஸ்துவின் இராஜ்யமானது பிதாவினிடத்தில் கையளிக்கப்படும்போது, முதலாம் கீழ்ப்படியாமை சம்பவித்து, அதற்கான தண்டனை மனுஷர் மீது வருவதற்கு முன்பு இருந்தது போன்ற தொடர்பு பரிமாற்றமானது, பரிபூரண மனுஷர்கள் மற்றும் பரலோக வாசிகளுக்கிடையே ஏற்படும். ஏதேனின் நாட்களில் என்ன வகையான தொடர்பு பரிமாற்றம் காணப்பட்டது என்று நமக்கு மிகத் துல்லியமாகத் தெரியாதுதான், எனினும் அது போதுமானதாகக் காணப்பட்டது; அப்படிப்பட்ட தொடர்பு பரிமாற்றமே எதிர்காலத்தில் பரிபூரணமான தேவனுக்கும், அவரது பூமிக்குரிய சாயலான பரிபூரண மனிதனுக்கும் இடையில் காணப்படும் என்பதில் நாம் நிச்சயம்கொள்ளலாம் - இதுபோன்ற தொடர்பு பரிமாற்றமே, ஆயிர வருஷ காலங்களின்போது மகிமையடைந்த சபைக்கும், அதன் பூமிக்குரிய பிரதிநிதிகளாகிய முற்பிதாக்களுக்கும் இடையே காணப்படும்.

---